24th December 1956]

(*b*) The Government examined the requests of the Sangam and informed the Sangam that they cannot comply with its requests.

Sri K. T. RAJU : மற்ற விஷயங்களில் சலுகை காட்டுவதற்கு கொஞ்சம் காலதாமதமானாலுங்கூட, பொரிக்கடலை விஷயத்தில் சலுகை காண்பித்து கடைசி நேரத்திலாவது சாதாரண வியாபாரிகளுக்கு இந்த உதவியை அளிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

The Hon. Sri M A. MANICKAVELU : ஏற்கனவே சாதாரண வியாபாரிகளுக்கு சலுகை காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், குறிப்பிட்ட விற்ற முதலுக்குமேல்தான் வரி போடப்படுகிறது. சாதாரண சிறு வியாபாரிகளுக்கு விற்று முதல் அந்த லிமிட்டுக்கு மேல் போகாது. ஆகையால் ஏற்கனவே அவர்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

Sri K. VINAYAKAM : பொரிகடலை ஒரு **cheap form of food** யாருக்கு பணம் அதிகமாக இல்லையோ, ஹோட்டலில் போய் சாப்பிட முடியாத நிலைமையில் இருக்கிறார்களோ, அவர்கள் இந்தப் பொரிகடலையை வாங்கி சாப்பிட்டு காலம் தள்ளுகிறார்கள். ஆகவே, இது ஒரு **cheap form of food** ஆக இருப்பதால் இதை விற் பனைவரியிலிருந்து விலக்களிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அழுகிப்போகக் கூடிய சாமான்களின் **category**-ல் இது வரவில்லை. ஏற்கனவே சிறிய வியாபாரிகளுக்கு வரி கிடையாது. பெரிய மூட்டைக்கணக்கில் வியாபாரம் செய்பவர்கள்தான் வரி கொடுக்க நேரிடும்.

Manufacture of Ornamental Handles

* 416 *Q.*—Sri K. T. RAJU (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to establish a training centre at Madurai for the manufacture of ornamental handles for furniture and for doors in houses ;

(*b*) whether any amount has been allotted by the Centre for this ; and

(*c*) the amount to be spent during this year?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The Government have sanctioned a scheme for the establishment of a Training Centre at Madurai for the manufacture of ornamental handles for almyrahs, doors, tables, cars, etc.

(*b*) The Government of India have sanctioned to this Government a grant of Rs. 40,250 and a loan of Rs. 12,000 for implementing the scheme.

(*c*) The probable expenditure on the scheme during the current year 1956–57 is Rs. 47,350.